# <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| | | |
|---|---|---|
| **MCOP.No. 139/2022** | **Date :** 28.11.2025 | **PW1** |
| Name: ஸ்டீபன் | த/பெ.அலெக்ஸாண்டர் | |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் TN 52 U 7318 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த தேதி 08.08.2022 மதியம் 11.45 மணி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 3 நாட்கள் காலதாமதமாக 11.8.2022 காலை6 மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல்அறிக்கையில் டாடா ஏஸ் வாகனத்தின் ஓட்டுநர்தான் எதிரி என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல்அறிக்கையின் படி புலன்விசாரணை காவல் துறையில் மேற்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.10 இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.10 ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.10 ஆவணத்தில் பக்கம் 3 யில் நான் தவறான பாதையில் எதிர் திசையில் அதிகவேகமாகவும், அஜாக்ரதையாகவும் சென்று என்று குறிப்பிட்டு விபத்து ஏற்படுத்திவிட்டதாக சம்பவத்தை மிகைப்படுத்தியும், உண்மைக்கு புறம்பாக புகார் கொடுத்துள்ளார் என விசாரணையில் தெரியவருவதால் இவ்வழக்கின் சம்பவத்தை பொறுத்தமட்டில் இறுதியறிக்கை (MISTAKE OF FACTS) பிழையுடைய வழக்காக கருதி மேல்நடவடிக்கை கைவிடப்பட்டு இவ்வழக்கின் வாதி லில்லி என்பவருக்கு ஆர்.சி.எஸ் 51/22 நாள் 13.12.2022 யின்படி சார்வு செய்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். போஸ்ட் ஆபிஸ் செல்வதற்கு ஒரே வழிதான் உள்ளது நான் வெளியே வரும்போது எதிரே வந்த வாகனம் வேகமாக வந்து என் மீது வந்து மோதி விபத்து ஏற்படுத்திவிட்டது. மேற்படி ஆர்.சி.எஸ்.வழக்கில் ஆட்சேபணை தெரிவித்து குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 மேட்டூரில் மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது. ஆர்.சி.எஸ்.111/2023 என்ற எண்ணில் நிலுவையில் உள்ளது. விபத்து சம்மந்தமாக மாதிரி வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வேலை செய்யும் அலுவலகம் வடக்கு திசையை நோக்கி உள்ளது என்றால் சரிதான். எனது வயது, வருமானம், தொழிலை நிரூபணம் செய்ய

ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் போஸ்ட் ஆபிசுக்கு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கிழபுறம் உள்ள போஸ்ட் ஆபிசுக்கு வந்தேன் என்றால் சரிதான். நான் போஸ்ட் ஆபிஸ் இருந்து வெளியே கேட் அருகே வந்து நிற்கும்போது என் மீது வாகனம் மோதிவிட்டது. நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் மேற்படி விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புலன்விசாரணையில் நான் தெற்குபக்கமாக வந்து யு டர்ன் எடுத்து வடக்கு பக்கமாக செல்வதற்கு பதிலாக போஸ்ட் ஆபிசில் இருந்து வடக்கு நோக்கி சென்று நானாக விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்று இறுதியறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் விபத்தில் அடிப்பட்டவுடன் அரசு மருத்துவமனைக்கு சென்று முதல் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான விபத்து பதிவேட்டு நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் ம.சா.ஆ.11 நகல்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அது தான் கையெழுத்து செய்யப்பட்டு எனக்குஅளித்த ஒரிஜினல் பில் ஆகும். ம.சா.ஆ.11 ஆவணத்தில் copy என்று டைப் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு மருத்துவமனையில் நான் பணம் கட்டியதற்காக அவர்கள் கொடுத்தது தான் மேற்படி பில்கள் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.11 ஆவணத்தில் 3,19,508 ரூபாய் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தற்போதும் வேலைக்கு சென்று கொண்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் விபத்திற்கு பின்னிட்டு உட்கார்ந்து கொண்டுதான் வேலை செய்கிறேன். இந்த விபத்து சம்மந்தமாக Mistake of Facts என்று இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த விபத்திற்கு முழுக்காரணமும் நான் தான் என்பதால் TORT–FEASOR என்ற அடிப்படையில் என்னுடைய அஜாக்ரதையால் ஏற்பட்ட விபத்திற்கு நஷ்டஈடு கோர இயலாது என்றால் சரியல்ல. விபத்தில் சம்மந்தப்பட்ட TN 32 P 0081 என்ற வாகனத்தை ஓட்டிய சிவக்குமார் என்பவருக்கு தகுந்த செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லாததால் 1ம் எதிர்மனுதாரர் பாலிஸி விதிகளை மீறியுள்ளார் என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் எந்தவித நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் இருந்தது என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் தலை கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. நான் தலைகவசம் அணிந்திருந்தேன். விபத்தின்போது மேற்படி தலை கவசம் உடைந்து என் தலையின் இடது பக்கம் காயம் ஏற்பட்டுவிட்டது. நான்

தலைகவசம் அணியவில்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாடசியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் காப்பீடு இல்லாத வாகனத்தை ஓட்டி சென்றுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கை செலவுத் தொகையுடன் எதிர்மனுதாரர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/—ஸ்டீபன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.